


**19.07.2024**

தலைப்புச் செய்திகள்

1. மனதின் குரல் நிகழ்ச்சிக்கு சமூக மாற்றத்திற்கான கருத்துக்கள் இளைஞர்களிடமிருந்து அதிக அளவில் பெறப்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாட்டில் ரயில் விமான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு ஆறாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

3. இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை மத்திய அரசு விரைவில் தொடங்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

4. கர்நாடக அணைகளிலிருந்து 67 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ளது.

5. தம்புலாவில் ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

********

மன்-கி-பாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன்கிபாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் வரும் 28ஆம் தேதி உரையாற்ற உள்ள நிலையில் மக்களிடமிருந்து இதுதொடர்பாக பெறப்படும் கருத்துக்கள் குறித்து பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்களிடமிருந்து அதிக எண்ணிக்கையில் சமூக மாற்றத்திற்கான கூடுதல் உள்ளீடுகள் பெறுவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**mygov.in,** நமோ செயலி, 1800 11 7800 என்ற தொலைபேசி எண்ணில் மக்கள் தொடர்ந்து கருத்துகளை அனுப்ப பிரதமர் வலியுறுத்தினார்.

ஐரோப்பிய யூனியன் அதிபராக உர்சுலா வாண்டர் லேயன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

உலக நன்மைக்காக இருவரும் இணைந்து பணியாற்றுவதை தாம் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

********

எல்.முருகன்

தமிழ்நாட்டில் ரயில்வே மற்றும் விமான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு ஆறாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக விளங்கும் நீலகிரி மேட்டுப்பாளையம் பகுதிகளை தென் மாவட்டங்களோடு இணைப்பதால் சுற்றுலா பயணிகள் பயனடைவர் என்றார்.

மேலும் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த விவசாயிகளும் தொழில்துறையினரும் தங்களது உற்பத்தி பொருட்களை பிற பகுதிகளுக்கு அனுப்ப இந்த ரயில்சேவை பெரிதும் உதவும் என்று கூறினார்.

வாரத்தில் இரண்டு நாட்கள் இயக்கப்படும் மேட்டுப்பாளையம் - தூத்துக்குடி இடையேயான ரயில் சேவை அனைத்து நாட்களிலும் இயக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

வாய்ஸ்

இந்நிகழ்ச்சியில் கோவை - மேட்டுப்பாளையம் மெமு ரயில் போத்தனூர் வரை நீட்டிக்கும் சேவையையும் அவர் தொடங்கிவைத்தார்.

இதேபோல் மைசூர் - மயிலாடுதுறை விரைவு ரயிலை கடலூர் துறைமுகம் வரை நீட்டிக்கும் வசதியையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

********

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

இயற்கை வேளாண் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்துவதற்கான பிரச்சாரத்தை மத்திய அரசு விரைவில் தொடங்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் இயற்கை வேளாண் தொடர்பான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் ரசாயன உரங்களை பயன்படுத்தாமல் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று எடுத்துரைத்தார்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

********

சக்தி காந்ததாஸ்

**UPI** போன்ற டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளை ரிசர்வ் வங்கி ஊக்குவிப்பதாக வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நவீன வங்கி சேவை மற்றும் காப்பீடு தொடர்பான உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இதன்மூலம் இந்தியாவின் நிதி உள்ளடக்க பிரிவு வளர்ச்சி அடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

வங்கிகள் வழங்கும் கடன்களின் அளவிலும், வங்கியின் வைப்புத்தொகை வளர்ச்சியிலும் சமன்பாடு நிலவவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே நடப்பு நிதியாண்டின் 2ஆவது காலாண்டின் பொருளாதார வளர்ச்சி உத்வேகத்துடன் இருப்பதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

வேளாண் சார் அம்சங்கள், ஊரக மேம்பாட்டு செலவுகளில் சாதகமான வளர்ச்சி காணப்படுவதாக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

நகர்புறத்திற்கு ஈடாக ஊரக பகுதிகள் வளர்ச்சி பெற்று ஒருங்கிணைப்பு ஏற்பட இது வழிகோலும் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

********

மைக்ரோ சாஃப்ட்

மைக்ரோ சா∴ப்ட் இணையதள சேவை செயலிழந்ததன் காரணமாக உலக அளவில் அது சார்ந்த சேவைகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

வங்கி சேவைகள், வர்த்தகம், சர்வதேச விமான போக்குவரத்து, ஊடக வெளியீடுகள் போன்றவற்றின் சேவைகள் கிடைக்கப்பெறாமல் பயனாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளாயினர்.

அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட சைபர் பாதுகாப்பு சேவை நிறுவனமாக **crowd Strike**- நிறுவனத்தின் தொழில் நுட்ப இணைப்பால் இந்த பாதிப்பு நேரிட்டதாக தெரிகிறது.

இதனிடையே இத்தொழில்நுட்ப கோளாறுகளை சரிசெய்யும் பணிகளில் பொறியியல் நிபுணர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இந்தியாவில் உள்ள மைக்ரோ சா∴ப்ட் தொழில்நுட்ப சேவைகள் பாதிக்கப்பட்டதோடு, அமெரிக்காவின் பல விமான போக்குவரத்து சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நியூசிலாந்து மற்றும் ஜப்பான் நாடுகளிலும் இதன் பாதிப்பு எதிரொலித்ததாக கூறப்படுகிறது.

********

மாண்டவியா

விளையாட்டு வீரர்களின் திறன்களை வெளிக்கொணர்ந்து சிறப்பான வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா உறுதியளித்துள்ளார்.

புதுதில்லியில் கேலோ இந்தியா திறன் மேம்பாட்டு கண்டறிதல் நிகழ்ச்சியை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், தடகள வீரர்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் தேசத்தை மத்திய அரசு கட்டமைத்து வருவதாக கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நம் நாடு வேகமான வளர்ச்சியுடன் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவை அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ந்த தேசமாக முன்னேற்ற விரும்பும் பிரதமரின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப விளையாட்டு துறையை

மேம்படுத்த மத்திய அரசு பணியாற்றி வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில், பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 515 வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் ஆய்வக கட்டிடங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

குழந்தை நேய வகுப்பறை கட்டும் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 441 வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் 28 தகைசால் பள்ளிகளில் முடிவுற்ற புனரமைப்பு பணிகளையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

திருவண்ணாமலையில் முதன்மை கல்வி அலுவலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கல்வி வளாகத்தையும் அவர் திறந்துவைத்தார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளிகளில் பயின்று உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் வாய்ப்பினை பெற்ற மாணாக்கருக்கு மடிகணினிகளையும் அவர் வழங்கினார்.

தொடர்ந்து சிறைத்துறை சார்பில் 9 கோடி ரூபாய் செலவில் திண்டிவனத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தை காணொலி மூலம் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

********

முதலமைச்சர் அம்மா உணவகம்

தமிழ்நாட்டில் அம்மா உணவகங்களை மேம்படுத்த முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் அம்மா உணவகங்களை இன்று ஆய்வு செய்த அவர் அமைச்சர்கள் தத்தம் பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

சென்னையில் 21 கோடி ரூபாய் செலவில் அம்மா உணவகங்களை மேம்படுத்த அவர் ஆணையிட்டார்.

********

மெய்யநாதன்

தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் 530 பயனாளிகளுக்கு கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடுகளுக்கான சாவிகளை இன்று வழங்கி பேசிய அவர் பழைய தொகுப்பு வீடுகளின் தர மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

முன்னதாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தேர்ச்சி சதவிகிதத்தை அதிகரிக்கும் வகையில் மாணாக்கருக்கு தேர்ச்சி குறிப்பேடுகளை அவர் வழங்கினார்.

********

சேகர்பாபு

தமிழ்நாட்டில் நடப்பாண்டு ஒன்றரை கோடி ரூபாய் செலவில் ஆயிரம் நபர்கள் அறுபடை வீடுகளுக்கு அழைத்துச்செல்லப்படுவார்கள் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் முருக பக்தர்கள் பங்கேற்கும் ஆன்மீக மாநாடு வரும் 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்றார்.

முன்னதாக அறுபடை வீடுகளுக்கு ஆடிமாத கட்டணமில்லா ஆன்மீக பயணத்தை சென்னை மயிலாப்பூரில் அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார்.

********

பொன்முடி

விழுப்புரம் மாவட்டத்தில் 9 கோடியே 70 லட்ச ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் 21 மணிமண்டபங்கள் விரைவில் திறக்கப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகே 2 மணிமண்டபங்கள் கட்டப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

********

எடப்பாடி

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் காவல்துறையினர் ரோந்து பணிகளை தீவிரபடுத்தி குற்றச்செயல்கள் நடைபெறா வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

********

முல்லை பெரியாறு - கண்காணிப்பு குழு

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் முல்லை பெரியாறு அணையை மத்திய துணை கண்காணிப்பு குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் திரு.சதீஸ் தலைமையில் நடைபெறும் இந்த ஆய்வில் பிரதான அணை, பேபி அணை, மதகு இயக்கங்கள், கசிவு நீர் வெளியேற்றம் குறித்து இக்குழுவினர் ஆராய்ந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

********

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து 67 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 44 ஆயிரத்து 963 கன அடியாக இன்று அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 45 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

நீர்வரத்து மேலும் அதிகரிக்க கூடும் என்பதால் தாழ்வான பகுதிகளில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

********

வானிலை

வங்க கடலில் நிலவிவந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக இன்று வலுப்பெற்றது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை அதிகாலை ஒடிசா கடற்கரையில் பூரிக்கு அருகே கடக்க கூடும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

காற்றின் திசை வேகமாறுபாடு காரணமாக நீலகிரி மாவட்டத்தில் இன்று அதி கன மழை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்ட மலைபகுதிகளில் கன மிக கன மழையும்,

திருப்பூர் தேனி திண்டுக்கல் மாவட்ட மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன மழையும் இன்று பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் இதற்குட்பட்ட பகுதிகளில் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

********

மகளிர்

ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி இலங்கையில் இன்று தொடங்குகிறது.

தம்புலாவில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

********

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் அர்ஜுன் கதே இணை – அமெரிக்க இணையை நாளை எதிர்கொள்கிறது.

********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

********